**அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, திரண்ட நிதியம் தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 03 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனமொன்றினால் போதியளவான முற்காலப் பகுதியின் தவறுகள், அவற்றை கண்டறிந்ததன் பின்னர் விநியோகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியின் தவறுகளும் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிடுவதன் மூலம் பிற்போட்ட ரீதியில் சரிசெய்யப்பட | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட தவறான ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிடப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தும் போது மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியில் சீராக்கங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அது பாவனைக்கு எடுப்பதற்காக தயார்படுத்தப்பட்ட நிலைமையின் பின்னர் ஆரம்பமாவதுடன் அதாவது முகாமைத்துவத்தால் எதிர்பார்த்த தேவையான முறையில் செயற்படக் கூடிய நிலைமையில் மற்றும் நிலையத்தில் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போதாகும். எனினும் நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடர்பாக கவனம் செலுத்தாமல் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டிற்காகவும் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டமை மற்றும் வழுக்களின் காரணமாக மீண்டும் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்ட உபகரணங்களுக்காகவும் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 17,399,860 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு பெறுமதியை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய போட்டிப் பரீட்சைக்காக செலவிடப்பட்ட ரூபா 805,657 செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது தவறினால் மீளாய்வாண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்குரிய செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்ய முடியாது. |
| (ஆ) | அளவைகள் ஆராய்ச்சி கூடத்தில் இறாக்கைகளை பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 367,010 முற்பணம் மற்றும் ரூபா 43,000 கட்டிட பழுதுபார்த்தல் செலவினம் என்பன கட்டிடமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கட்டிடக் கணக்கின் மீதி ரூபா 410,010 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அளவைகள் ஆராய்ச்சிக் கூடத்தில் இறாக்கைகள் பொருத்தும் செலவினம் முதலீட்டு செயற்பாடாக கருத முடியாதிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இந்தத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது. | மீண்டெழும் செலவினங்கள் மூலதனமாக்க முடியாதிருந்ததுடன் அந்த செலவினங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் காண்பிக்கா திருத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 123,333 வாகன பழுதுபார்த்தல் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட சகல செலவினங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளக்கும் அலகுகள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற சகல அளக்கும் உபகரணங்களும் வருடாந்தம் நம்பகத் தன்மை உறுதிப்படுத்த வேண்டியிருந்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சகல உபகரணங்களும் நம்பகத் தன்மை பரீட்சிக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் சரியான திட்ட முறைமையொன்று நிதியத்தில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | அளக்கும் உபகரணங்கள் வருடாந்தம் நம்பகத் தன்மை பரீட்சிக்கப் படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்படுகின்ற தரவு முறைமையொன்றை தாபிப்பதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட போதிலும் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் கீழ் அந்த செயற்பாடுகள் வெற்றியளித்திருக்க வில்லை. தேவையான வளங்கள் 2022 ஆம் ஆண்டின் போது வழங்கியதன் பின்னர் தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | அரசாங்கத்தின் சகல வாகனங்களும் எரிபொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது கிலோமீற்றர் 25,000 ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின்கள் தொடர்பாக பிரதான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அல்லது இந்த காரணங்களுக்கிடையே முதலில் நிகழுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் | எரிபொருள் தொடர்பாக ஏற்பட்டுள்ள தற்போதைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் இந்த பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

14 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 1.7 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 99 மில்லியன் முதல் ரூபா 229 மில்லியன் வரையான வீச்சில் மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் இந்த மீதி நிதியத்தின் மாதாந்த தேவையுடன் ஒப்பிடும் போது 51 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான மிகைப் பணமொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த மிகையான மீதியை ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்தி வட்டி வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருந்த போதிலும் முகாமைத்துவத்தால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நடைமுறைக் கணக்கின் மீதிகளை அவ்வவ்போது சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டு வட்டி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் அவ்வாறு சேமிப்புக் கணக்கிலிருந்து ரூபா 5,699,922 வட்டி வருமானம் பெறப்பட்டுள்ளது. மேலும் நடைமுறைக் கணக்கின் மிகை மீதியொன்று பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் காணப்படுகின்ற கொள்வனவுகள் சிலவற்றிற்கு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தமையால் பேணிச் செல்லப்படுகின்றது. | நடைமுறைக் கணக்கின் மிகை மீதியை ஆக்கபூர்வமாக முதலீடு செய்து நிதியத்திற்காக வட்டி வருமானம் உழைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 66,445,027 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 99,436,023 ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 32,990,996 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஒட்டுமொத்த வருமானம் ரூபா 8,223,202 இனால் குறைவடைந்தமை மற்றும் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 24,767,794 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளில் மீளாய்வாண்டின் செயல்முன்னேற்றம் 10 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கிடையே திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆக்கபூர்வமாக திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாமை காரணமாக குறைந்த செயல்முன்னேற்றத்தை காண்பித்திருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளில் எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 12 மாவட்டங்களில் பயன்படுத்தப்படுகின்ற அளக்கும் தரங்களை மீண்டும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு மாவட்டம் தொடர்பாகவும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த பணிகள் கொவிட் தொற்றுநோயின் பின்னர் 2022 மே முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் சிக்கலின் காரணமாக தோல்வியடைந்திருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளில் எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றத் தை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (இ) | சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்வதற்காக ஏனைய அளவைகள் நிறுவனங்களுக்கு (NQI Bodies) ஒத்துழைப்பை காண்பிக்கின்ற விடயங்களின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கணிசமான நிகழ்ச்சித் திட்டங்களின் அளவு நிறைவேற்றப்பட்டிருந்த துடன் தற்போது அது கைவிடப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகளில் எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களிலும் ஓட்ட நிலையில் | வாகனங்களை விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காணப்படாத வாகனங்கள் சுற்றறிக்கையின் 02(அ) பந்தியின் பிரகாரம் விற்றுத் தீர்த்தலோ அல்லது 02(ஆ) பந்தியின் பிரகாரம் பழுதுபார்த்தலோ 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், நிதியத்திற்குச் சொந்தமான வாகனமொன்று 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.3 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 பெப்ரவரி 17 ஆந் திகதி ரூபா 19,468,582 கிரயத்தினைச் செய்து கொள்வனவு செய்யப்பட்ட CCB-1000-SL,1Kg Mass Comparator உபகரணத்தை பொருத்தும் போது வெளிப்படுத்தப்பட்ட பிரச்சினையின் காரணமாக மீண்டும் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. எனினும், 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் உரிய உபகரணம் திணைக்களத்திற்கு கிடைக்காமையின் காரணமாக அதிலிருந்து எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | உபகரணங்களை தாபிப்பதற்கு செல்லும் போது அதன் ஒரு பகுதி வழுவுடன் நிலைமையில் உள்ளமை உற்பத்திக் கம்பனியிலிருந்து உபகரணங்களை தாபிப்பதற்கு வருகை தந்த வெளிநாட்டு பொறியியலாளரால் இனங்காணப்பட்டிருந்த துடன் அதனை சரிசெய்து தயாரிப்பதற்காக மீண்டும் ஜேர்மனியின் தாய்க் கம்பனிக்கு எடுத்தச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்குரிய LC20 சதவீத கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு முகவரின் செயலாற்றல் காப்புறுதி என்பன விடுவிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் அந்த உபகரணங்களுக்குரிய பெறுகை ஒப்பந்தம் உற்பத்தி நிறுவனம் மற்றும் உள்நாட்டு முகவரினால் சரியான பிரகாரம் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட வழுக்களை சரிசெய்து | செலவினத் திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கூடிய விரைவில் உபகரணங்களை தாபிப்பதற்கு உரிய கம்பனி இரண்டும் இணங்கியிருந்தது. | |
| (ஆ) | கி.கிராம் 20-M1 அளக்கும் 50 உபகரணங்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,803,032 கிரயத்தில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக வழங்குனருக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. எனினும் சரிசெய்யப்பட்ட 15 உபகரணங்கள் மாத்திரம் மீண்டும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 35 உபகரணங்கள் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் சரிசெய்யப்பட்டு கையளிக்கப் பட்டிருக்கவில்லை. அந்த உபகரணங்களை விரைவாகப் பெற்று உரிய உபகரணங்கள் தொடர்பாக செலவிடப்பட்ட கிரயத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | Class -20Kg வீதம் 50 படிகள் கொண்டு வரப்பட்டு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் அவற்றை சரியான பிரகாரம் பொதியிடலைச்செய்து எடுத்துச் செல்லாமையால் எடையில் நுட்பமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அதனால் அந்த படிகளை கையேற்காமல் அவற்றை சரிசெய்து மீண்டும் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தலுடன் கையளிக்குமாறு உள்நாட்டு வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த படிகளின் நம்பகத்தன்மை உறுதிசெய்து வழுக்கள் நீக்கப்பட்ட 15 படிகள் தற்போது வரையில் கையளிக்கப்பட்டுள்ள துடன் ஏனைய படிகள் அவ்வவ்போது சரிசெய்யப்பட்டு வழங்குவதாக உள்நாட்டு முகவர் நிறுவனம் அறிவித்திருந்தது. அதன் மூலம் அந்த கொள்வனவுகளில் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அவ்வவ்போது பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலவினத் திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| Low range gas piston gauge system(1000 psi) மற்றும் Data Logger என்ற உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4,200,000 ஆக இருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 27,205,857 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உள்ளபடியான கிரயம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் 648 சதவீதமாக இருந்தது. | Low Range Gas Piston Gauge System(1000 psi) உபகரணம், Height Gauge உபகரணம் மற்றும் Data Loggers உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய செலவினம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவுக் கிரயம் சரியாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |